**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

**கூட்ட எண்.45** **நாள்.23.08.2019.**

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் **27.08.2019** செவ்வாய் கிழமை முற்பகல் **10.00** மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி **27.08.2019** செவ்வாய் கிழமை முற்பகல் **10.00** மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன்/2019 மற்றும் ஜுலை/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சியின் நிலை வழக்கறிஞர் திரு.K.வேணுகோபால் வழக்கறிஞர் என்பவரின் பதவி காலம் 31.03.2018–ல் முடிவடைவதால் நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவின் பதவிக்காலத்தினை 30.09.2018 வரை நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டது. தற்போது தொடர்ந்து நகராட்சி சம்மந்தமான வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்து வருவதால் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்த ஏதுவாக தொடர்ந்து 01.10.2018 முதல் 31.03.2021 வரை நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவி காலத்தினை நீட்டிப்பு செய்து திரு.K.வேணுகோபால் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– திரு.K.வேணுகோபால் வழக்கறிஞருக்கு நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவி காலத்தை 01.10.2018 முதல் 31.03.2021 வரை நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்காலம்.

**பொருள் எண் :03**

நகராட்சி பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனுமதித்தல் சம்மந்தமாக "தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003" என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் விளம்பர பலகைள் நிர்வகித்தல் சம்மந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் புதிய சட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவையும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது கீழ்கண்ட அரசாணைகள் மூலம் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அ) மேற்கண்ட பொருள் சம்மந்தமான கீழ்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. அரசாணை எண்.(4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:05.06.2018.
2. அரசாணை எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:30.01.2019.
3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:31.01.2019.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திருத்த அரசாணைகளில் பிரதானமாக கீழ்கண்ட சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- நிர்ணயித்துள்ளது
2. விளம்பர வரி என்ற வாசகத்தினை விளம்பர பலகை உரிமக் கட்டணம் என மாற்றி அமைத்துள்ளது

   இதன்படிக்கு நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் (3 ஆண்டிற்கு) உரிமக் கட்டணம்

   1) பிரதான மற்றும் பேருந்து தடச் சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.6000/-
   2) மற்ற சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.4000/-
3. வருடாந்திர வாடகை இந்நகராட்சி பொறுத்த மட்டில் பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/- இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-
4. விளம்பர பலகைகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் / இடங்களில் மட்டுமே அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 285 ( I ) - ல் உள்ள தண்டணைக் கட்டணம் ரூ.10000/- உள்ளதை உயர்த்தி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
6. மேற்கூறிய அனைத்துக் கட்டணங்களும் நகராட்சியில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவற்றின்படிக்கு இந்நகராட்சி பகுதிக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம்/இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி கோரும் தேர்வுகளில் கீழ்கண்ட விகித அடிப்படையில் வருடாந்திர வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/-
2. இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-

**அலுவலக குறிப்பு :**

1. **நகராட்சியின் வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்டள்ள சட்ட விதிகள் திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**
2. **ஏற்கனவே மேற்படி விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் அடிப்படையிலும், விளம்பர பலகைள் அனுமதிக்ககும் தருணங்களில் நகராட்சி பொறியியல் பிரிவில் அன்றைய தேதியில் அனுமதி அளிக்கும் கட்டிடத்தின் நிலைப்புறுதி குறித்த கருத்தினை பெற்று நகராட்சி கட்டிடத்திற்கு அனுமதி பெறும் நபர்கள் எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் இந்நகராட்சி சொந்தமான கட்டிடங்களின் மீது விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**பொருள் எண் :04**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை, மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூார் மற்றம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியபடி , மழைநீர் சேகரிப்பு குறித்து பொது மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் வலியுறுத்தவும், தண்ணீர் சிக்கனத்தின் அவசியம் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்கவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிய விளம்பர நோட்டீஸ்(ம) ஸ்டிக்கர் அச்சிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. **<u>மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்த மல்டி கலர் நோட்டீஸ் (இரு பக்கங்கள் கொண்டது)</u>**

| வ.எண் | கூட்டுறவு நிறுவனத்தின்பெயர் | எண்ணிக்கை | தொகை – ரு |
|---|---|---|---|
| 1 | Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., | 1 | 4.48 |
| 2 | Salem Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., | 1 | 5.00 |
| 3 | Tirunelveliu District Multi Purpose Service Industrial Co-operative Society Ltd., | 1 | 4.70 |

2. **<u>தண்ணீர் சிக்கனத்தின் அவசியம் குறித்த மல்டி கலர் ஸ்டிக்கர்</u>**

| வ.எண் | கூட்டுறவு நிறுவனத்தின்பெயர் | எண்ணிக்கை | தொகை – ரு |
|---|---|---|---|
| 1 | Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., | 1 | 17.70 |
| 2 | Salem Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., | 1 | 18.00 |
| 3 | Tirunelveliu District Multi Purpose Service Industrial Co-operative Society Ltd., | 1 | 17.90 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., என்பவரின்

விலைப்புள்ளிகளை ஏற்று உரிய விளம்பர நோட்டீஸ் (ம) கலர் ஸ்டிக்கர் அச்சிடவும் அதற்கான தோராய செலவினம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. **குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-operative Society Ltd., என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செயல்முறை உத்திரவு வழங்கி, பணிகள் மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**(F1/984/2019)**

**பொருள் எண் :05**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் புவியியல் தகவல் அமைப்புகளை சேகரிக்கும் பணிக்கு தோராய செலவினம் ரு.2.50/- இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்:561 நாள்:28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எ ண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் புவியியல் தகவல் அமைப்புகளை சேகரிக்கும் பணி | 1.Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62. | Rs.1,90,000/- |
| | | 2.GEO Adithya Technologies, #7,II Floor,Zackeriah Colony Main Road, Kodambakkam, Chennai -94 | Rs.2,10,000/- |
| | | 3.Konseptos, 140/1,4th Floor,V.R.Towers, 2nd Main Road, Kasturi Nagar,Bangalore. | Rs.2,20,000/- |

<u>அலுவலகக்குறிப்பு</u>: 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற விலைபுள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62 என்பவரின் குறைந்த விலைபுள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:301/2019/எப்1)

**பொருள் எண் :06**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் GPS தொழில் நுட்பத்தில் சாலைகளின் விவரம் பொதுக்கழிப்பிடங்கள் MCC அமைவிடங்கள்,சுடுகாடு, குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விபரங்களுடன் நகர வரைப்படம் தயார் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரு.2.50/- இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்:562 நாள்:28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம்,GPS தொழில் நுட்பத்தில் சாலைகளின் விவரம் பொதுக்கழிப்பிடங்கள் MCC அமைவிடங்கள்,சுடுகாடு, குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விபரங்களுடன் நகர வரைப்படம் தயார் செய்யும் பணி | 1.Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62. | Rs.1,85,000/- |
| | | 2.GEO Adithya Technologies, #7,II Floor,Zackeriah Colony Main Road, Kodambakkam, Chennai -94 | Rs.1,98,000/- |
| | | 3. The Athens Charitable and Educational Trust, P.N0.47, Ramamoorthy Nagar, Phase – II,Avalurpet Road,Tiruvannamalai. | Rs.2,10,000/- |

<u>அலுவலகக்குறிப்பு</u>: 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற விலைபுள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62 என்பவரின் குறைந்த விலைபுள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:308/2019/எப்1)

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டது. புதிய வார்டுகளுக்கு ஏற்ப வாக்குச் சாவடி மையங்களின் வரைப்படம் மற்றும் வாக்குச் சாவடி மையங்கள்அடங்கிய நகர வரைபடங்கள் தயாரித்து வழங்க நகராட்சி

அனுமதி பெற்ற கட்டிட பட வரைவாளர்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | J.M.Constructions | S.D. Planners & Builders | P.M.R. Planners & Bulders |
|---|---|---|---|---|---|
| 1 | Preparation of Polling Station Booth Map in AutoCad | 1 | 20000 | 23000 | 25000 |
| 2 | Preparation of Polling Station Individual Booth Map in AutoCad | 1 | 850 | 950 | 1000 |
| 3 | A2 size colour print out | 1 | 400 | 500 | 600 |
| 4 | A4 size colour print out | 1 Booklet | 3 | 5 | 6 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய J.M.Constructions, அரக்கோணம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ள மற்றும் அதற்கான தோராய செலவீனம் ரூ.1,00000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. **குறைந்த விலைப்புள்ளி வழங்கிய J.M.Constructions, அரக்கோணம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செயல்முறை உத்திரவு வழங்கி, பணிகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அதற்கான தோராய செலவீனம் ரூ.1,00000/– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**பொருள் எண் :08**

பொது சுகாதாப்பிரிவில் முதிர் கொசு ஒழுப்பு பணிக்கு பயன்படும் புகை மருந்து TECHNICAL MALATHION மருந்து 2018–2019 வருடத்திற்கு 140 லிட்டர் செலவினம் செய்யப்பட்டுள்ளது. தற்போது TECHNICAL MALATHION மருந்து குறைந்த அளவே (15 லிட்டர்) இருப்பு உள்ளதால் அவசர அவசியம் கருதி 2019–2020 வருடத்திற்கு தேவையான TECHNICAL MALATHION மருந்து 200 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.2.40 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 489/எச்1/2019)

**பொருள் எண் :09**

பொது சுகாதாப்பிரிவில் கழிவுநீர் கால்வாய் பகுதியில் கொசுப்புழு ஒழுப்பு பணிக்கு பயன்படும் பேசிலேஸ் துரிஞ்சியென்சிஸ் மருந்து 2018–2019 வருடத்திற்கு 127 கிலோ செலவினம் செய்யப்பட்டுள்ளது. தற்போது குறைந்த அளவே (50 கிலோ ) இருப்பு உள்ளதால் அவசர அவசியம் கருதி 2019–2020 வருடத்திற்கு தேவையான மருந்து 200 கிலோ கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 490/எச்1/2019)

**பொருள் எண் :10**

பொது சுகாதாப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு பயன்படும் மருந்து கொசு புழு ஒழுப்பு மருந்தான டெமிபாஸ் (Temephos Emulsifiablr 50 % EC ) 2018–2019 வருடத்திற்கு 61

லிட்டர் செலவினம் செய்யப்பட்டுள்ளது. தற்போது குறைந்த அளவே (16லிட்டர்) இருப்பு உள்ளதால் அவசர அவசியம் கருதி 2019–2020 வருடத்திற்கு தேவையான டெமிபாஸ் (Temephos Emulsifiablr 50 % EC ) மருந்து 200 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.1.80 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 491/எச்1/2019)

**பொருள் எண் :11**

இந்நகராட்சி எல்லைக்குள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழைத்தொழிலாளர் குடும்பங்களுக்கான ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/–வழங்கும் திட்டத்திற்கான Online–ல் PDF வடிவில் பெறப்பட்டுள்ள படிவங்கள் அச்சடிக்க ஒநுசுடீஓ கடைகளில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம் தொகைரூ | ஸ்ரீ மகாலட்சுமி அம்மா ஜெராக்ஸ் திருத்தணி தொகைரூ |
|---|---|---|---|---|
| 1 | BPL படிவம் அச்சடித்தல் (XEROX) | 16328 பக்கங்கள் | ரூ.16,328/– | ரூ.20,410/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம், அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.16,328/– லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.16,328/–லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :12**

இந்நகராட்சி பகுதியில் பொதுசுகாதார நலன் கருதி டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தவும் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் பெரிய புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (டீசல் 60 லிட்டர், மற்றும் பெட்ரோல் 5லிட்டர் கொள்ளவு) 1 எண்ணிக்கை கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 1248/எச்1/2019)**

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட சோமசுந்தரம் நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுன் உரக்கிடங்கிற்கு சாலை மற்றும் மேடை அமைக்க வேண்டியுள்ளது. உரக்கிடங்கிற்கு (MCC) பேட்டரி வாகனங்கள் செல்வதற்கு இடையூராகவும் மற்றும் பொதுமக்களுக்கு சிரமமாக உள்ளது. புதியதாக சிமெண்ட் சாலை மற்றும் மேடை அமைக்க மதிப்பீடு ரூ.8.75 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :14**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தவும் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் பெரிய புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (டீசல் 60 லிட்டர், மற்றும் பெட்ரோல் 5லிட்டர் கொள்ளவு) 1 எண்ணிக்கை கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதற்கு 16.08.2019 அன்று பெறப்பட்டுள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **மருந்து அடிக்கும் இயந்திரம் விவரம்** | **கார்த்திகா சிஸ்டம் இன்ஜினியரிங் சென்னை– 600083 ஒன்றின் விலை ரூ. (GST உட்பட )** | **பவாணி அம்மன் எண்டர்பிரைசஸ் சென்னை–600083 ஒன்றின் விலை ரூ. (GST உட்பட)** |
|---|---|---|---|
| 1 | MEGA FOGGING MACHINE<br>DIESEL - 60 lit<br>PETROL - 5 lit<br>Capacity | **6,95,000/–** | 7,00,000/- |

. மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **கார்த்திகா சிஸ்டம், இன்ஜினியரிங் சென்னை,** அவர்களுக்கு அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகை ரூ.6.95 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 1248/எச்1/2019)**

**பொருள் எண் :15**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக நீலவேம்பு குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட Tampcol சென்னை, நிறுவனத்தின் மூலம் நீலவேம்பு 200 கிலோ கொள்முதல் செய்து கொள்ள தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு விவரம் கேட்டபோது நீலவேம்பு 1/2 கிலோவின் விலை ரூ.191.10/–( 1 கிலோ ரூ.382.20/–) எனவும் தங்களுக்கு தேவைப்படும் நிலவேம்பிற்குண்டான தொகையினை **Tampcol** என்ற பெ யருக்கு வங்கி வரைவோலை எடுத்து வழங்கினால் நீலவேம்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்காணும் நீலவேம்பு 200 கிலோ கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1289/எச்1/2019)**

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்கள் ஜீன் 2019 ஆம் மாதம் வரை தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் ஜீலை 2019 மற்றும் ஆகஸ்டு 2019 ஆம் மாதம் கிரின் வாரியார், திருவள்ளூர் நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியில் பணிபுரியும் 195 பணியாளர்களில் 40 DBC பணியாளர்களை பெற்று டெங்குகாய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது 26.08.2019 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்கள் அரக்கோணம் நகராட்சியில் 9 நபர்களுக்கு டெங்கு காய்ச்சல் நோய் தொற்று ஏற்பட்டுள்ளதால் 85 DBC பணியாளர்களை பணி அமர்த்தி கொண்டு டெங்கு காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டிற்குள் வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 01.09.2019 முதல் 30.11.2019 வரை 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் 2019–20 ஆம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண் E2/8687/2019 நாள்: 06.05.2019ல் துப்புரவு பணியாளரின் தினக்கூலி தொகை ரூ.335/–என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தோரய செலவினம் ரூ.27.00/– லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த 1) இன்பம் மகளிர் சுய உதவிக்குழு 2) ஏஞ்சல் மகளிர் சுய உதவிக்குழு 3) இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் 85 பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1245/எச்1/2019)**

**பொருள் எண் :17**

அரக்கோணம் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பணிகள் காரணமாக நகரில் உள்ள சாலைகள் பழுதடைந்த நிலையில் தற்சமயம் புதியதாக சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வார்டு எண்.9 கன்னியப்பன் நகர் 1–வது தெரு மற்றும் 2 தெருவில் சாலை பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூராக உள்ளது. எனவே வார்டு எண்.9 கன்னியப்பன் நகர் 1–வது தெரு மற்றும் 2–வது தெரு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :18**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் புதியதாக ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சிண்டெக்ஸ் அமைத்தல் மற்றும் கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது, மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.03 ராஜுவ் காந்தி நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டேக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 2 | வார்டு எண்.06 நேருஜி நகர் 3–வது குறுக்கு தெருவில் புதிய ஆழ்துளை | 1.70 |

| | | |
|---|---|---|
| | கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | |
| 3 | வார்டு எண்.06 காமராஜர் நகர் பூங்கா அருகில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 4 | வார்டு எண்.09 லஷ்மி நகரில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 5 | வார்டு எண்.10 நன்னுமியான் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 6 | வார்டு எண்.11 பூக்கார தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல்.. | 1.70 |
| 7 | வார்டு எண்.12 மணியக்கார தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 8 | வார்டு எண்.13 மசூதி தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 9 | வார்டு எண்.14 வெள்ளைக்குளம் 1–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 10 | வார்டு எண்.16 ராஜாஜி தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 11 | வார்டு எண்.17 பாலசுப்ரமணி கோயில் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 12 | வார்டு எண்.21 கன்னியப்பன் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 13 | வார்டு எண்.22 பாக்கியம்மாள் காலனியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 14 | வார்டு எண்.25 பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 15 | வார்டு எண்.27 முபாரக் நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 16 | வார்டு எண்.28 புதுப்பேட்டை 3–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 17 | வார்டு எண்.29 டி.என்.நகர் 1–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 18 | வார்டு எண்.28 புதுப்பேட்டை 3–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 19 | வார்டு எண்.31 லஷ்மி நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 20 | வார்டு எண்.33 கனக தூர்கையம்மன் கோயில் அருகில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 21 | வார்டு எண்.34 பிள்ளையார் கோயில் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 22 | வார்டு எண்.34 உப்பரபாளையம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 23 | வார்டு எண்.36 செய்யூர்பாட்டை பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |

| | | |
|---|---|---|
| 24 | வார்டு எண்.36 மலையப்பன் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.70 |
| 25 | வார்டு எண்.24 ஏ பி எம் சர்ச் 5–வது தெருவில் உள்ள கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் | 1.00 |
| 26 | வார்டு எண்.24 ஏ பி எம் சர்ச் 4–வது குறுக்கு தெருவில் உள்ள கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் | 1.00 |
| 27 | வார்டு எண்.32 சோமசுந்தரம் 1–வது தெருவில் உள்ள கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் | 1.00 |
| 28 | வார்டு எண்.25 என்.வி.என் 1–வது தெருவில் உள்ள கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் | 1.00 |
| 29 | வார்டு எண்.7 போலாட்சியம்மன் தெருவில் (காவனூர் ரோடு) தெருவில் உள்ள கைப்பம்பை சிறுமின் விசைப்பம்பாக மாற்றுதல் | 1.00 |

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :19**

அரக்கோணம் நகராட்சி தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயங்கிக்கொண்டிருந்த யூனிட் –I 120HP சாப்ட் ஸ்டாடரில் உள்ள ஆட்டோ டிரான்ஸ்பார்மர் எரிந்துள்ளது. இதனால் யூனிட் –I மோட்டார் இயக்க முடியவில்லை மேலும் மெயின் கான்டக்ட் கிட், ஆக்ஸ்லரி கான்டக்ட் கிட், மிகவும் தேய்மானம் அடைந்ததை தொடர்ந்து, டைமரும் பழுதடைந்துள்ளது எனவே யூனிட் –I மோட்டரை இயக்க சாப்ட் ஸ்டாடரின் ஆட்டோ டிரான்ஸ்பார்ம்கள், மெயின் கான்டக்ட் கிட், ஆக்ஸ்லரி கான்டக்ட் கிட், டைமர் இவைகளை புதுப்பிக்க வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது தேர்தல் விதி நடத்தையில் உள்ளதால் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சண்முகம் அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.1410/14/இ1**

**பொருள் எண் :20**

நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண்.TN73W5969 என்ற வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுது வேலைகளை சரி செய்யவும் மற்றும் வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1410/14/இ1**

**பொருள் எண் :21**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08, காலிவாரி கண்டிகை, குறிஞ்சி நகர் காராஜர் நகர், வார்டு எண்.09 லஷ்மி நகர் மற்றும் வார்டு எண்.33 சோமசுந்தரம் நகர் 1–வது தெரு மற்றும் 2–வது தெரு ஆகிய பகுதிகளுக்கு நகராட்சியின் குடிநீர் சரிவர விநியோகம் செய்ய இயலவில்லை எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு புதியதாக 3'' வால்வுகள் 2 எண்ணிக்கை 4'' வால்வு 1 எண்ணிக்கை மற்றும் 5'' வால்வு 2 எண்ணிக்கையில் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.0.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீரராகவன் அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.1229/2019/இ1)**

**பொருள் எண் :22**

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.1668/19/ஆ2 நாள்.27.06.2019ன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னோடி திட்டமான ‘‘மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை ‘‘நகர்புற பகுதிகளில் சீரிய முறையில் செயல்படுத்தும் பொருட்டு நகராட்சி பகுதிகளில் உள்ள அரசு கட்டிடங்கள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் வணிக கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு ஏற்படுத்திட வேண்டியுள்ளது இதற்கான மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு மழை நீர் கட்டமைப்புகளை அமைத்து பணி முடிவறிக்கையை அனுப்பு வேண்டியுள்ளதால் நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீரராகவன் அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.1229/2019/இ1)**

**பொருள் எண்.23**

நகராட்சிக்கு சொந்தமான ஹைட்ராலிக் லேடர் வண்டி எண்.TN73W8881 என்ற வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி 2019–20 ஆம் ஆண்டிற்கு Fitnees Certificate பெறுவதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1286/14/இ1**

**பொருள் எண்.24**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வேலூர் அவர்களின் செயல்றை கடித எண்.அ8/857/2018 நாள். .02.2019ன்படி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கீழ் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது என்பதை நகரமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சி, 9–வது வார்டு ஆதிதிராவிட அபிவிருத்தி சங்கம் அருகில் 12.5 மீ 6 செட் 300 வாட் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல். | 7.25 |

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.1241/2018/இ1**

**பொருள் எண்.25**

அரக்கோணம் நகராட்சியில் 7–வது மாநில உயர் மட்ட குழுவில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19 ஆம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு Bio Mining – Reclamation of existing dump yard Located at Silverpettai by removing the legacy waste of 5400 cum in Arakkonam Municipality பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி Bio Mining பணிகளை செய்ய ே நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு மின் இணைப்பு மூலம் இயக்க Low Tension Curent Transformer (LTCT) Metering Panel அமைக்கவும், மேலும் (LTCT) Metering Panel அமைக்க Galvanized Sheed Roofing Sheet Shed அமைக்க

வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணி என்பதால் பயனீட்டு சான்று மற்றும் பணி முடிவு அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் பணியினை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.அண்ணாதுரை அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண்.26**

பாராளுமன்ற தேர்தலுக்காக அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வாக்குசாவடி மையங்களில் மாற்று திறனாளிகள் சாய்தள வசதி, மின் விசிறி மின் விளக்குகள், குடிநீர் தொட்டி, (Syntex Tank) மற்றும் மின்மோட்டர் மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு தேர்தல் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.அண்ணாதுரை அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்கப்படட்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண்.27**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள்,துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் ஒட்டுநர்களுக்கு 2019–2020 ம் ஆண்டிற்கு காலனிகள் உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.0.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 1246/எச்1/2019)**

**பொருள் எண்.28**

அரசாணை எண். 306 (நிதித்துறை) நாள்.13.10.2019.ல் மகப்பேறு உதவியாளருக்கு சீருடை வழங்கிட ஆண்டிற்கு ரூ.2000/– வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளராக பணிபுரியும் 1.திருமதி.ரோஸ் மற்றும் 2.திருமதி.ஜெயந்தி, என்பவர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு சீருடைக்காக ரூ.2000/– வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 1289/எச்1/2019)**

**பொருள் எண்.29**

இந்நகராட்சி கணினியில் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களின் டோனர்கள் இறுப்பு குறைந்த அளவே உள்ளது. மேலும் புதிய டோனர்கள் வாங்கும் போது விலை மிகவும் அதிகமாக உள்ளதால் பயன்படுத்தப்பட்ட டோனர்களை Refiling செய்து கொண்டால் செலவினம் குறையும் என்பதால் டோனர்களை Refiling தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் கீழ் கண்டவாறு 09.07.2019 அன்று விலைப்புள்ளி வரப்பெற்றன. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | பெயர் | ஒன்றின் விலை | | |
|---|---|---|---|---|---|
| | | | Drum | Refiling | Blading |
| 1 | 88 A Toner Refilling | Sri Sai Printers & Computer service | 250 | 350 | 150 |
| 2 | 88 A Toner Refilling | Nilavu Computer Invester | 350 | 450 | 250 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 88 A Toner Refilling | Anand Computer | 300 | 400 | 200 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Sri Sai Printers & Computer Service அவர்ளுக்கு வேலை உத்திரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Sai Printers & Computer Service அவர்களுக்கு வேலை உத்திரவுவழங்குவதற்கு அதற்கான உத்தேசன செலவின தொகை ரூ.50,000/— க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் . 2989/2017/பி2)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**